பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 25 | 10-08-94 | புதன்கிழமை | ஓசை 173

## வாய் சுகாதார ஆண்டாக 1994 உலகசுகாதாரநிறுவனம்பிரகடனம்

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த ஆண்டை வாய் சுகாதார ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. வாயில் ஏற்படும் நோய்கள் மிகவும் பொதுவானவையாகக் காணப்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் இவை அதிகரித்து வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது சிறந்த முறையில் வாய் சுகாதாரத்தைப் பேணும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கென நோய்த் தடுப்பு மருத்துவ சிகிச்சை, பொது மக்களுக்கு ஊக்கமளித்தல் போன்ற விசேட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (6 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவைக் கொல்லச் சதி; ஆயுதக் குழுவுடன் ஒப்பந்தம்

## பிரசாரக்கூட்டத்தை இடைநிறுத்தினார்

(கொழும்பு)

தன்னைக் கொலை செய்வதற்காக அரசசார்பு ஆயுதக் குழுவுடன் பலர் ஒப்பந்தம் செய்திருப்பதாக கம்பஹா மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி முதன்மை வேட்பாளர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து தமக்குக் கிடைத்த நம்பிக்கையான தகவல்களைத் தொடர்ந்து தேர்தல் பிரசாரங்களில் நேரடியாக ஈடுபடுவதை இடைநிறுத்தியுள்ளதாக செய்தி நிறுவனங்களுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 5-ம் திகதி, பொறளையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் வைத்து, அரசசார்பு ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பி. இருமுறை தன்னைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும்,

தொடர்ந்து கொலை மிரட்டல்களும், எச்சரிக்கையும் வந்துகொண்டு இருந்த போதும் கடந்த இருதினங்களாக உறுதி செய்யப்பட்ட நிலையில் இத்தகவல் தமக்கு வந்ததாகவும் 14-ம் திகதிக்கு முன்னர் தாம் கொலை செய்யப்பட இருப்பதாக தெரிய வந்ததாகவும் அவர் தெரிவித்தார்-

இம்முறை தமக்கு கிடைத்த தகவல்கள் புறக்கணிக்கக் கூடியவையல்ல. எனவே தமது பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தவேண்டியுள்ளது என அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்து. இடம்பெறவுள்ள பிரசாரக் கூட்டங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரங்களுக்கு சந்திரிகா செல்லவில்லை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவியான சந்திரிகா குமாரணதுங்காவை, பிரசார மேடைகளில் வைத்துகொலை செய்வதற்கான சதிமுயற்சிகள் ...

தொடர்ந்து நேற்று நண்பகலுடன் தனது தேர்தல் பிரசாரங்கள் அனைத்தையும் சந்திரிகா குமாரணதுங்கா நிறுத்திக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட் ...

## யாழ். படை முகாம்களை தாக்க புலிகள் திட்டம்

### ராணுவ புலனாய்வு பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலிற்கு முன்னர் யாழ். குடாநாட்டில் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் திட்டமிட்டு வருவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவு, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வடபகுதி இராணுவ தளபதி மேஜர் ஒ. எச். யூ. செனவிரட்ணவுடன் தொடர்புகொண்டு தேர்தல் முடிவடையும் வரை யாழ். குடாநாட்டு இராணுவ முகாம்களுக்கு விசேட பாதுகாப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பகுதியில் 5072 ஆசிரிய வெற்றிடம்

(நல்லூர்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களைத் தவிர்த்து 5072 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இதற்கென உடனடியாக ஆசிரியர்கள் நியமனம் செய்ய இயலாமலுள்ளார்கள் எனவும் பாடசாலைகளிலுள்ள மேலதிக ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை பற்றாக்குறையான இடங்களுக்கு இடமாற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவரின் போராட்டம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்று மறியற்போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்களான 43 பேரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைப்பது என்ற முடிவைக் கண்டித்து இம் மறியற் போராட்டத்தினை மருத்துவபீட மாணவர்கள் நடாத்தினர்.

நேற்றுக்காலை 7-00 மணியளவில் இருந்து மருத்துவபீட மாணவர்கள் தமது போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவர்கள் துணைவேந்தருடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை தனியார் மரு ... யுள்ளது.

மேற்படி முடிவு குறித்து ...

## ஊழல் விசாரணை குறித்த ஆவணங்கள் அழிக்கபணிப்பு

(கொழும்பு)

அரசாங்க அமைச்சர்கள் மற்றும் கூட்டுத் தாபனத் தலைவர்கள் மீதான லஞ்ச ஊழல்கள் தொடர்பான சகல ஆவணங்களையும் அழித்து விடும்படி சிறிலங்கா ஜனதிபதி டி.பி. விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது-

உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி, மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்க, துறைமுக கப்பல்துறை அமைச்சர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உரிய கௌரவம் வழங்க கூரேக்கு உறுதிமொழி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரங்கள் சிறிசேன கூரே இல்லாததால் களைகட்டாமற் போகவே, சமரச முயற்சிகளின் பின் கூரே மீண்டும் திரும்பிவர அழைக்கப்பட்டதாக கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

சிறிசேனா கூரே வெளிநாடு ஒன்றிற்கு குடும்பத்தினருடன் சென்றதிலிருந்து ஐ.தே.க. பிரசாரங்கள் சோடைபோனதால் கட்சிக்குள் அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் உரிய கௌரவம் வழங்கப்படும் என்ற உறுதிமொழி அளிக்கப்பட்டு அவர் சமரசம் செய்யப்பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது,

## அரசியல் தலைவர் ஒருவரை

## துணைவேந்தருடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைத்துக் கொள்வது என்ற தீர்மானம் குறித்து பல்கலைக் கழக துணைவேந்தருடன் மருத்துவபீட மாணவர் ஒன்றியம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது.

மேற்படி முடிவு குறித்து தமது ஆட்சேபனைகளை மருத்துவபீட மாணவர் ஒன்றியம் துணைவேந்தருக்கு தெரிவித்துள்ளது.

நேற்று முற்பகல் சுமார் ஒரு மணித்தியாலம்வரை நடைபெற்ற இப் பேச்சு வார்த்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உழவுயந்திர விபத்தில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

(வடமராட்சி)

உழவு இயந்திரத்தின் பெட்டித்துலா தலையில் தாக்கியதில் மூளை பாதிப்படைந்து இளைஞர் ஒருவர் பலியானார். மற்றொரு இளைஞர் காயத்துக்கு இலக்கானார். இச்சம்பவம் பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில்நேற்றுமுன்தினம் பிற்பகல் நிகழ்ந்தது.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த மகாலிங்கம் மனோகரன் (வயது 18) என்பவரே பலியானார். இவருடன் உழவு இயந்திரத்தில் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர் கவனத்திற்கு

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார். எதிர்வரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நியமன கடிதம் கையளிப்பு

கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சினால் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பதவிக்கான பயிற்சிநெறிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதற் தொகுதி பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். அரசாங்க அதிபரால் கையளிக்கப்படவுள்ளதாக திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# புலிகள் தமது ஆற்றலை மீண்டும் நிரூபித்துள்ளனர்

(கொழும்பு)

''பலாலி இராணுவதளத்தினுள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதன்மூலம் விடுதலைப் புலிகள் தமது ஆற்றலையும், திறனையும் மீண்டும் ஒருமுறை நிரூபித்து உள்ளனர்''. இவ்வாறு சண்டே டைம்சின் பாதுகாப்பு செய்தியாளர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், பாதுகாப்பு துறையினரின் கலந்துரையாடல்களிலும், விவாதங்களிலும், இன்னும் சில காலத்திற்காவது இது பற்றிப் பேசப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

---

ரணதுங்காவை, பிரசார மேடைகளில் வைத்துகொலை செய்வதற்கான சதிமுயற்சிகள் அதிகரித்து வருவதைத் திரிகா குமாரணதுங்கா நிறுத்திக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா பேசாவிட்டால் பொ.ஐ.முவுக்குபின்னடைவு

(கொழும்பு)

தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள நேரத்தில் சந்திரிகா குமாரணதுங்க தேர்தல் கூட்டங்களில் கலந்து கொள்ளாமை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என அரசியல்அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரத்தின் போது இவரின் பேச்சைக் கேட்பதற்காகவே பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வருவதாகவும் எனவே இவர்கள் ஏமாற்றம் அடைந்து விடுவர் எனவும் மேலும் அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# அரசியல் தலைவர் ஒருவரை குறிவைத்து வெடிகுண்டு மாலை

### புலிகள் ஏற்பாடு செய்துள்ளனராம்

(கொழும்பு)

அரசியல்தலைவர் ஒருவரை இலக்கு வைத்து வெடிகுண்டு பொருத்தப்பட்ட மாலை ஒன்று கொழும்பு நகரில் உலாவித் திரிவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம் மாலை புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு பொது மக்களின் கைகளுக்கு சென்றுள்ளதாகவும் 30 மீற்றர் சுற்று வட்டாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த வெடி பொருள்களுடன் அமைக்கப்பட்டுள்ளஇது தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதோ, அல்லது வரவேற்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளின் கையில் கொழும்புநகரின்பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு முப்படைகளின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன-

தேர்தல் காலங்களில் விடுதலைப் புலிகளின் இலக்கு கொழும்பு நகர் மீது இருப்பதாக தெரிய வந்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் சென்ற சனிக்கிழமை முதல் முப்படைகளிடமும் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி மேலும் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு இணைப்பை பொ.ஐ.முன்னணி ஏற்காது

### பௌத்த குருமாருக்கு சிறிமா உத்தரவாதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குஇணைப்பை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரிக்காது. தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு-கிழக்கு இணைப்பதற்கு வேண்டி நின்றாலும் எங்கள் கட்சி அதை ஏற்றுக் கொள்ள மாட்டாது. பொதுஜன ஐக்கிய முன்னணி உப- தலைவி சந்திரிகா குமாரணதுங்காவும் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்-

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக பௌத்த நடவடிக்கை குழுவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்-வடக்கு-கிழக்கு இணைப்பை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரிக்குமா என பௌத்த நடவடிக்கை குழு கேட்டு எழுதிய கடிதத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியதாக கொழும்பு வார இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது-

அக் கடிதத்தில் மேலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டையும் மதத்தையும் கவனத்திற் கொள்க

### சந்திரிகாவிற்கு மல்வத்தபீடம் யோசனை

நாட்டையும், மதத்தையும் அதன் சரித்திர பூர்வமான பின்னணியையும் கவனத்தில் கொண்டு முடிவுகளை மேற்கொள்ளவும். இவ்வாறு மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்கதேரோ திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு ஆலோசனை கூறியுள்ளார்

அத்துடன் தாயாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆசியுடனும், அனுசரணையுடனும் செயல்களில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

---

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றால் நவம்பர்முன் பாரியபடை நடவடிக்கை

### ஏசியா வீக் சஞ்சிகை கூறுகிறது

(கொழும்பு)

ஆட்சிக்கு வரவிருக்கும் எந்தவொரு கட்சியும், தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் என உத்தரவாதம் கூறமுடியாதுள்ளது என 'ஏசியாவீக்' சஞ்சிகைதெரிவித்துள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி இராணுவத் தீர்வையே நாடி நிற்கின்றார். ஆளும் ஐ. தே. கவும், எதிர்க்கட்சிகளும் பேச்சுவார்த்தை பற்றி கூறுகின்றன. ஆனால் சிறிலங்கா இராணுவம் தன்னைப் பலப்படுத்தி வருகின்றது எனவும் அச்சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைக்கு கதவுகள் திறந்திருக்கின்றன என கூறும் ஜனாதிபதி, இது இனப்பிரச்சினையல்ல, பயங்கரவாதப் பிரச்சினையே என அழுத்திக் கூறுகின்றார்.

தமிழர் இனப்பிரச்சினை பற்றிய ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாக சிறிலங்கா அரசியற்கட்சிகள் நடைபெறவுள்ள தேர்தலைக் கருதுகின்றன. ஐ. தே. க. வெற்றி பெற்றால், நவம்பருக்கு முன்னதாக, யாழ்ப்பாணம் மீது பாரிய தாக்குதலை இராணுவம் நடத்தலாம் எனவும் அச் சஞ்சிகை கூறியுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

## உதவிகள் நிறுத்தம்

1992 காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து திருப்பியனுப்பப்பட்ட அகதிகளுக்கு இனி எந்தவித உதவிகளும் வழங்கப்படமாட்டாது என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் தெரிவித்துள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனையாளர் தேவை

இன்று தமிழீழத்தில் அமோகமாக விற்பனையாகும் ஆனந்தம் சியாக்காய்ப் பவுடர் விற்பனையாளர் தேவை, தகுதியடிப்படையில்சம்பளம், வசதி செய்து கொடுக்கப்படும், ஸ்ரீசச்சிதானந்த களஞ்சியம், ஆசிரம அருகாமை கைதடி. (9068)

### இலவச தையல் பயிற்சி

(தொல்புரம்)

பெண்களுக்கான சுய வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் முகமாக தேசிய சர்வோதயமருதனாமடபிரதேச நிலையத்தினரால் இலவச தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நவீனதொழில் நுட்பதிறன் மிக்க ஆசிரியர்களினால் நெறிப்படுத்தப்படவுள்ள மேற்படி இலவசவகுப்புக்களில் தையல் பயிற்சி, சிகையழகு அலங்கரிப்பு, பூ வேலைகள், கேக் ஐசிங் செய்தல் போன்றவற்றிற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இந்த வகுப்புகளில் டங்கு பற்ற விரும்புவோர் மருதனார்மடம் றொட்டி ஆலடியிலுள்ள சர்வோதய பிரதேச நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (41)

### றோயல் வெற்றி பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் மிட்ரவுண் றோட்டரக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் றோயலுக்கும் சென் நிக்கலஸுக்கும் இடையில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்தது போட்டியில் றோயல் 1.0 என்ற கோல் கணக்கில் வென்றது. (88)

### பொதுசன உதவிப்பணம்

தென்மராட்சி பிரதேசச் செயலாளர் பகுதியில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் (தர்மப்பணம்) பெறுவோர்களுக்கான ஆகஸ்ட் மாதக் கொடுப்பனவு தற்போது தென்மராட்சி பிரதேச செய

## முடிவுகள் வெளியானதும் ஆலோசனை தேவைப்படும்

### கட்சித்தலைவர்களுக்கு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் தினமான எதிர்வரும் 17 திகதியன்று ஆலோசனை கலப்பதற்கு வசதியாககாத்து இருக்கும்படி சகல அரசியல் கட்சித் தலைவர்களையும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா கோரியுள்ளார்.

அரசியலமைப்பின்படி 113 உறுப்பினர்களைப் பாராளுமன்றத்தில் பெற்றுக் கொள்ளும் கட்சியே ஆட்சி அமைக்கத் தகுதியுடையது என்றும், எனினும் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அரசியலமைப்பு நெருக்கடி உருவாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் ஆலோசனை கலப்பு அவசியம் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### மடுத் திருப்பதிக்கு 50வது ஆண்டுநிறைவு

(நல்லூர்)

மடுக் கோயில் அபிஷேகம் செய்யப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 15 ம்திகதி மடுத்தேவாலயத்தில் கொண்டாடப்பட உள்ளது.

இவ் ஆலயம் 1944ம் ஆண்டின் நடுப்பகுதியில் அன்று யாழ் ஆயராக இருந்த அதிவணக்கத்துக்குரிய கியோமர் ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டது.

ஆவணி மாதக்கொண்டாட்டம் 6 ம் திகதி ஆரம்பமாகியது. 15-ம் திகதி காலை 5.45 மணிக்கு முதலாவது திருப்பலியும் 6 30 மணிக்கு தங்கயூபிலித் திருப்பலி மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையினால் ஒப்புக் கொடுக்கப்பட்டு மடுமாதாவின் திருச்சுரூப பவனியும் அன்றைய தினம்இடம் பெற உள்ளது. (17)

### ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இசைமாமணி திரு. எஸ். குமாரசாமி அவர்கள் பாடிய கீர்த்தனாஞ்சலி ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்றுமாலை 6-30 மணிக்கு நாயன்மார்க்சட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் மீது இராசையா குகதாசன் பாடிய பாடல்களே இசைமாமணி குமாரசாமி அவர்களால் பாடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### உதைபந்தாட்டம்

யாழ் மிட் - ரவுண் றோற்ரறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் மோதும் அணிகள்-

றோயல்ஸ் வி. க எதிர் யங் கென்றீசியஸ் வி. க. அன்ரனீஸ் வி. க எதிர் ஞானமுருகன் வி. க.

## உளவளதுணைகற்கைநெறி யாழ் பல்கலையில் ஆரம்பம்

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்பு அலகினால் நடத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறிகளில் உளவளத்துணை அடிப்படைக்கற்கை நெறியின் தொகுதி 3 ற்கான விரிவுரைகள் எதிர்வரும் சனிக்கிழமை பி ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்பு அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சனி, ஞாயிறு தினங்களில் வாரம் ஒன்பது மணித்தியாலங்கள் தொடர்ந்து நடைபெறும்இவ்விரிவுரைகள் ஐந்துவாரங்கள் வரை நடாத்தப்பட்டு எண்பது வீத வகுப்புக்களுக்கு சமூகம் தரும் பங்குபற்றுனர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (17)

### பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சார்ந்த மாதனை மாதர் சங்க பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பி-ப2-00 மணியளவில் மாதனை விளையாட்டு மைதானத்தில் அபிவிருத்திச் சங்க தலைவர் திருமதி க. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (41)

★ ★ ★ ★

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவின் திருநெல்வேலி காளி கோவிலடி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் நிலையத்தலைவர் சி. ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (41)

### அடையாளம் காட்டி பெறவும்

தங்கச்சங்கிலி ஒன்று பருத்தித்துறை நகராட்சி மன்ற நூலகத்தில் இருந்து நூலக பரிசகரினால் கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை நகராட்சி மன்ற விசேட ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களை தெரிவித்து ஆணையாளர் திரு கே. சண்முகநாதனிடம் பெற்றுக் கொள்ளலாம். (யோ) (25)

## தேர்தல் அவதானிகள் குழு கட்சிகள் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

சர்வதேச தேர்தல் அவதானிகள் இம்மாதம் இலங்கையில் தங்கியிருக்கும் போது அரசியல் கட்சிகள், குழுக்கள் ஆகியவற்றின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வர் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவர்கள் இம் மாதம் 12-ம் 13 ம் திகதிகளிலும் 17-ம் திகதி முதல்20-ம் திகதி வரை கொழும்பு'கில்ற்ரன்' ஹோட்டலில் அரசியல் கட்சிகளினதும் குழுக்களினதும் முறைப்பாடுகளை ஏற்கத் தயாராக இருப்பர் கில்ற்ரன் ஹோட்டலில் நிறுவப்பட்டுள்ள தேர்தல் அவதானிகள் செயலகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களைச் சந்திப்பதற்காக ஏற்பாடுகளைச்செய்துகொள்ளமுடியும் இக்குழுவினர் 14 முதல் 17 வரை மாவட்டங்களில் தங்கியிருப்பர். அவர்களை மாவட்டங்களில் சந்திக்க விரும்பும் கட்சிகள் தேர்தல் மாவட்ட தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தருடாக முன் கூட்டியே ஏற்பாடு செய்து கொள்வதன் மூலம் சந்தித்துக் கொள்ள முடியுமாம். அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் இக்குழுவில் அடங்கியுள்ளனர். சர்வதேச ஸ்தாபனங்களைச் சேர்ந்த சிலரும் இதில் இடம்பெறுகின்றனர். இக்குழுவில் மொத்தம் 55 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

### கோழிகளுக்கு தூக்கநோய்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசத்தின் சில பகுதிகளில் கோழிகளுக்கு தூக்க நோய் ஏற்பட்டுள்ளது.

தொல்புரம், மூளாய், சுழிபுரம் பகுதிகளில் இந்த தூக்க நோயினால் பல கோழிகள் இறந்துள்ளன. இதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் கவலை கொண்டுள்ளன. மேலும் இந்த நோயினை தடுக்கும் பொருட்டு அரச கால்நடை வைத்தியப் பகுதியினரை மக்கள் நாடியுள்ளதாக தெரியவருகின்றது. (41)


## நல்வாய்ப்பு சீட்டிழுப்பு

(அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு)


18 - 9 - 1994

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினரால் நடத்தப்படும் இலவச மருந்தாளர் பயிற்சி நெறிக்கும், இலவச மருத்துவ சேவை வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பை நடத்தவுள்ளோம், அனைத்து வர்த்தக பெருமக்களும், பொது மக்களும் தங்களது ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமக்கு தாங்கள் செலுத்துவது ரூ 10/- மட்டும். ஆனால் அதன் சேவையோ பன்மடங்கு, ''சிறுதுளி பெருவெள்ளம்'' என்பதுபோல் 10/-வை பெரிதெனப் பார்க்காது, செலவோடு, செலவாக எமக்கு ஆதரவு அளியுங்கள், 1ம் - பரிசு - ரூபா 10000/- 2ம் - பரிசு - ரூபா 5000/- 3ம்-பரிசு - ரூபா 2500/- இதைவிட ஆறுதல் பரிசு ரூபா 200/- பெறுமதியான 50 பரிசுகள்.

...விற்பனை செய்யும் முகவர் பெயர் பின்னர்


## நன்றி நவில்கின்றோம்



## நினைவு கூருகின்றோம்...

### 10-08-1994...

1985-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-திரியாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **ராஜா!** (மாணிக்கம் நடராஜா-உலந்தாவ-அக்குரச)

1987-ம் ஆண்டு திருமலையில் தேசவிரோதசக்திகளினால் அடித்துக்கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**செல்வம்** (காளிதாசன் செல்வகுமார்-திருமலை)

1990-ம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**ஈஸ்வரகுமார்** (யோகநாதன் - பழுகாமம் - மட்டு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**சுரேஸ்** (சோமசுந்தரம் பரமேஸ்வரன் - முட்டுச்சேனை, மூதூர் - திருமலை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா, இந்தியப்படை

கொடுப்பனவு தற்போது தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவை அலுவலகத்தினரால் அந்த அந்தப் பகுதி தபால் நிலையங்களுக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

... 200/- பெறுமதியான 50 பரிசுகள்.

டிக்கேற் விற்பனை செய்யும் முகவர் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

நன்றி

மு. பத்மநாதன் (செயலாளர்)

(சி-10081)


பரிசு 1,000/-
தீபாவளி
அன்று
குலுக்கப்படும்.
ஐந்து லேபல்
சேர்த்து அனுப்பவும்

# ஆனந்தம்
# சீயாக்காய்ப் பவுடர்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு; பேன்; சொடுகு வராது தடுப்பதற்கு; கேசம் வளர்ச்சி பெறுவதற்கு; கேசம் பட்டுப்போல் மிளிர்வதற்கு; கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கு; கேசத்தை குளிர்ச்சியூட்டுவதற்குத் தேவையான மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்துத் தயாரிக்க;

சித்த வைத்திய நிபுணரும், கைதடி சுதேச வைத்திய சங்கத் தலைவருமான

**Dr. K. T. S. சபாநாதன்**

அவர்கள் வழங்கிய
ஆலோசனையின்படி தயாரிக்கப் பெற்றது

## ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

கேட்டு வாங்கிப் பயன் பெறுங்கள்.
வர்த்தக திணைக்களம், கூட்டுறவு சங்க கிளைகள் மற்றும் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்:

## ஸ்ரீசச்சிதானந்த களஞ்சியம்

ஆசிரம அருகாமை, கைதடி.

(சி-10080)




## திருமதி முத்தையா அன்னம்மா
(தோலியோடை, வதிரி, கரவெட்டி)

தோற்றம்: 15 - 03 - 1912 மறைவு: 09 - 07 - 1994

அறவழி நின்று - நெறிவழி காட்டி -
திருவொளியாய்த் திகழ்ந்த எம் அன்புத்
- தெய்வமே!
உம்மால் உயர்ந்திட்ட நாம் என்றும்
- உம்மை மறவோம்!

09-07-1994 சனிக்கிழமை மறைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, 08-08-1994 திங்கட்கிழமை வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள விடுதியில் நடைபெற்ற 31-ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்:-

மக்கள்:- கமலாம்பிகை, பத்மாவதி UK, சண்முகராசா, நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம், விருத்தாசலம் UK.

மருமக்கள்:- குணசிங்கம் UK, கிருஷ்ணவேணி, நீதிவான் நீதிமன்று, கிளிநொச்சி. கிருஷ்ணவேணி UK.

பேரப்பிள்ளைகள்:- கமலாகரன் UK, கிருபாம்பிகைUK, கெங்காதரன் UK, கமலசேகரன் Zambia, கனகாம்பிகை, பேராதனைப் பல்கலைக் கழகம், அரன் UK, ஆயன் UK, யதுகுலன், வவுனிக்குளம், யதுமித்ரன் வவுனிக்குளம், கிருஷ்ணன் UK, வினோலன் UK, அன்னகாளி UK, கீரன் UK.

பூட்டப்பிள்ளைகள்:- சுதர்சன் UK, குணாளன் UK, செந்தூரன் UK.

தகவல்:-
**சண்முகராசா**
(மகன்)

வவுனிக்குளம், [சி-10082]

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா, இந்தியப்படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10078)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
12 - 07 - 1975

மறைவு:
11 - 07 - 1994


## கடம்பராயன் பிரதீபா
[மாதகல் துறைமுகம்]

அன்புக்கணவன்: க. கடம்பராயன்
மகள்: க. கஜனி
மாமா: வி. கற்கண்டு குடும்பத்தினர்
பாட்டன், பாட்டி.

தற்போதைய முகவரி:
கொடிகாமம்,
புகையிரத நிலையம்.

(சி-10079)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
...இரவல் நூலகம்.



### 17 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் கிரிக்கெட் போட்டி

# பரியோவானுடன் மோதிய மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது

யாழ். பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட 17 வயதுக் குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி முடிவடைந்துள்ளது. இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பரியோவான் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் மத்தியகல்லூரி மைதானத்தில் சந்தித்துக் கொண்டன. முதல் இனிங்சில் கூடிய ஓட்டங்கள் பெற்றமை என்ற வகையில் யாழ். மத்தியகல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இச்சுற்றுப்போட்டியில் எல்லாமாக ஆறு ஆட்டங்களை மத்திய கல்லூரி அணி சந்தித்தது. இவற்றுள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிராக தீர்க்கமான வெற்றியைப் பெற்றவர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரியிடம்தோல்வியுற்றிருக்கின்றார்கள். ஏனைய ஆட்டங்களில் புள்ளி அடிப்படையில் முதன்மை பெற்று வந்துள்ளார்கள்.

இவ்இளம் வீரர்களின் சாதனைபற்றி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு ஜெயகுமாரைச் சந்தித்து உரையாடினோம். அணிவீரர்கள் பற்றிப்பேசும்போதுசுரேஸ்பெற்ற இரண்டு அரை சதம்கள் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது யாழ் இந்துக்கல்லூரிக்கும், சென்பற்றிக்ஸ்கல்லூரிக்கும்எதிராக தலா 71 ஓட்டங்கள் பெற்ற சுரேஸ் பரியோவான் கல்லூரிக்குஎதிராக39 ஓட்டங்கள் பெற்றுள்ளார். சிவானந்தராசா இறுதியாட்டத்தில் 52 ஓட்டங்களைச் சிறப்பாகப் பெற்றமையையும் குறிப்பிடுகின்றார்.

அரையிறுதி ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் அணிக்கு எதிராக அருள்நிதி பெற்ற 34 ஓட்டங்கள் முக்கியமானவை எனும் பொறுப்பாசிரியர் 126/6 என்ற நிலையில் இருந்து அருள்நிதி சேகரித்த 34 ஓட்டங்கள் கல்லூரியின் வெற்றிக்கு வழிவகுத்த பெறுமதி வாய்ந்த ஓட்டங்கள் என்று கூறுகிறார்.

உண்மையில் தமது அணி ஒருபலம் வாய்ந்த பந்துவீச்சு அணி எனும் பொறுப்பாசிரியர் ''ஆரம்ப பந்து வீச்சாளர்கள் குணசீலனும், அமலனும் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெகு சிறப்பாகப் பந்து வீசினார்கள். இருவருமே வலதுகை வேகப்பந்து வீச்சாளர்கள் இவர்களின் சராசரிகள் அவர்களின் திறமையைக் காட்டும்'' என்றுகூறி அவர்களின் சராசரியைக் காட்டினார். குணசீலன் பரியோவான் கல்லூரியுடன் 5/55, ஸ்கந்தாவுடன 5/15, சென் பற்றிக்ஸுடன் 4/26 என்றவாறும், அமலன்யாழ் இந்துக் கல்லூரியுடன் 2/17, ஸ்கந்தாவுடன் 6/15 என்றவாறும் இலக்குகளைப் பெற்றுள்ளமை அவர்களின் திறமையை பளிச்சிட்டுக்காட்டியது.

ஆரம்பத்தில் உங்கள் அணி ஒரு பலமிக்க அணியாக இனங்காணப்படவில்லை. எனினும் குறிப்பிடத்தக்க சாதனையொன்றை நிகழ்த்தியிருக்கிறார்கள் எப்படி? என்று வினவினோம். ''எமது அணி சிறந்ததொரு பந்து வீச்சு, பந்துக் காப்பு அணி. நாங்கள் திட்டமிட்ட வகையில் துடுப்பாட்டத் திறமையை வளர்த்து வந்தோம். யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மரபுக்கேற்ப இறுதிவரை எமது முழுத்திறமையையும் பிரயோகிப்பது என்று தீர்மானித்தோம் அருணோதயம் சிறந்ததொரு பயிற்றுநர். ஒழுக்கத்தினூடே முறையான பயிற்சியில் நம்பிக்கையுடையவர், அதே போன்று எமது அணிப் பிள்ளைகள். திறமையான வீரர்கள் பணிவுள்ள மாணவர்கள். எனவே எமது இலக்கு எமக்கு துலாம்பரமாகவே எளிதாக அமைந்தது என்கிறார் திரு. ஜெயகுமார்.

இறுதியாட்டம் பற்றிக் குறிப்பிடும் போது ''எமது அணியினர் 217 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தனர். இதில் சிவானந்தராஜா அரைச்சதம், அமலன் 42, சுரேஸ் 39 என்ற வாறு பெற்றுக் கொண்டனர். விமலன், வாகீசன் முறையே 3-5 இலக்குகளைப் பெற்றனர். பரியோவான் கல்லூரியினர் திறமையானஅணியினர். சிறப்பாகவே ஆடிக் கொண்டிருந்தார்கள். நிர்மலானந்தனும் விமலனும் சோடியாக ஓட்டங்கள் சேர்க்க ஆரம்பித்தமை ஆபத்தானதாகவே இருந்தது இருந்தும் நிர்மலானந்தன் ஆட்டமிழந்த பின் இலக்குகள் தொடர்ச்சியாகச் சரிய ஆரம்பித்தன. ஆனால் விமலன் தொடர்ந்தும் ஒருபுறம் நிலைத்து விட்டமை சிக்கலாகவே இருந்தது ஒரு கட்டத்தில் அவசியமாகப் போடவேண்டிய 20 ஓவர்கள் நெருங்கும் போது 9/195 என்ற வகையில் இரு அணிகளுமே ஊசலாடும் நிலையில் ஆட்டம் அமைந்தது. ஆனால் விமலன் தன் 89 வது ஓட்டத்தில் கொடுத்த பிடி யாழ் மத்திய கல்லூரிக்கு வெற்றியைக் கொடுத்தது ''என்று முடிக்கிறார்.

இவ்வெற்றியில் அதிபரின் அதீத உற்சாகம் பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோரின் விடாமுயற்சி என்பன முக்கிய பங்கு வகித்தமையைக் காணமுடிகின்றது இத்தோடு இவர்களுக்குத் தேவையான கிரிக்கெட் உபகரணங்களைத் தாராளமாகவே தந்துதவிய சென்றலைட்ஸ் வி. கழகத்தினரையும் மிக்க நன்றியுடன் இவர்கள் நினைவு கூருகிறார்கள்



17 வயதிற்குக் கீழ்ப்பட்ட மத்திய கல்லூரி
கிரிக்கெட் அணி

| | |
|---|---|
| சிறந்த துடுப்பாட்ட வீரர்: | விமலன் (89) பரியோவான் கல்லூரி |
| சிறந்த பந்துவீச்சாளர்; | குணசீலன் (5/56) யாழ். மத்திய கல்லூரி |
| சிறந்த பந்துதடுப்பாளர் | கோகிலரமணன் யாழ் மத்தியகல்லூரி |
| ஆட்ட நாயகன்: | விமலன் பரியோவான் கல்லூரி |

### ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# பற்றீசியன் சம்பியன்பட்டம்வென்றது பலமான அணிகள் பல மண் கவ்வின

யாழ். மத்தியகல்லூரியின் 175 வருட நிறைவையொட்டி கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் ஆறு பேர் கொண்ட ஆறு ஓவர் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடாத்தினார்கள். இச்சுற்றுப் போட்டியில் 15 கழக

...றுக் கொண்டார். ஆட்டம் எதிரணிக்குச் சாதகமாக இராது என்பது பொதுவான கருத்தாக இருந்தது. ஆனால் Kccc அணியினர் 5.2 ஓவர்களிலேயே இவ்வெண்ணிக்கையைத் தாண்டி பல்கலைக் கழக அணியினருக்கும், ரசிகர்களுக்கும் அதிர்ச்சியைக்

...தித்தார்கள். சாப்ரா இலகுவாக ஓட்டங்களைச் சேகரிக்க இயலவில்லை. ஆனால் கணேஸ் லாவகமாக ஆடி 25 ஓட்டங்கள் வரையில் பெற்று அணியை 6/83 என்ற நிலைக்குக் கொண்டு சென்றார். அண்மைக் காலங்களில் அழகாகத் துளிர்த்துவரும் பற்றீ...

...ஜொனியன்சை அபாரமாக ஆடி ஆட்டமிழக்கச் செய்தனர். ஜொனியன்ஸ் அணிக்காகச் சூரியகுமார் பெற்ற28 ஓட்டங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. அவரது பொறுப்பான ஆட்டம் ஓரளவாவது ஜொனியன்சை நிமிரச் செய்தது எனலாம். பதி...

...த்துக் கூறுவதற்கு பதிவுகள் மிகவும் அவசியமானவை. இச்சுற்றுப்போட்டி தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஒரு சில கழகங்களை அணுகியபோது சகலதரப்பினருமே துல்லியமாகப் பதிவுகளைப் பேணவில்லை என்ற ஊகத்துக்கு வரவேண்டியிருந்தது. இனிமேல் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாக சிறந்த முறையில் பதிவுகளைப் பேணினால் உடனடித் தேவைகள் மட்டுமன்றி, நீண்ட காலத்திலும் கூட அவை மிக்க பிரயோசனமாக இருக்கும்.

இந்தப் போட்டியின் பின் விளையாட்டு வீரர்கள் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்ட உணர்வலைகள் பலப்பல, ரசிகர்கள் விளையாட்டின் போக்குகளில் மாற்றங்களை விரும்புகின்றனர். காரணம் விளையாட்டில் கூடுதலாக லயிப்பதற்கே. பல்வேறு அணிகளும் தம் பலத்தை உணர வேண்டும். எமது மண்ணின் பல பகுதிகளிலும் இருந்தும் அணிகள் பலமாக வந்து போட்டியிடவேண்டும். இறுதிவெற்றி யாருக்கு என்பது ஊகத்துக்குக் கடினமாக இருக்க வேண்டும். குறித்த வட்டத்துக்குள் நடைபெறும் போட்டிகள் சலிப்பை ஏற்படுத்தும். தவிரவும் கிரிக்கெட்டில்கூட ஒரு ஆதிக்க உணர்வு இருப்பதாக எண்ணம் தோன்றும். நடந்து முடிந்த இந்தப்போட்டி ஒரு புதிய போக்கைக்காட்டி நிற்கின்றது. நல்லதொரு திருப்பம் இது. இது தொடர வேண்டும். இவ் வகையில் வளமான கிரிக்கெட் இன்னும் வளம் பெறும்.

இச்சுற்றுப்போட்டி முடிந்ததும் அடுத்த இருபது நிமிட நேரத்தினுள் பரிசளிப்பு விழாவை நடாத்தி முடித்த போட்டி ஏற்பாட்டாளர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஏனெனில் விளையாட்டின் முடிவின் பின் நடைபெறும் நிகழ்ச்சிகள் மிகவும் நீண்டு வெறுப்பையும் சலிப்பையும் ஏற்படுத்துவனவாகவே அமைகின்றன. இவ்வேற்பாட்டாளர்கள் காட்டிய முன்மாதிரி இனிவரும் எந்த விளையாட்டுக் களங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய முன் மாதிரியாகும்.

-நிர்மலன்.

யாழ். மத்திய கல்லூரியின் 175 வருட நிறைவையொட்டி கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் ஆறு பேர் கொண்ட ஆறு ஓவர் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடாத்தினார்கள். இச்சுற்றுப் போட்டியில் 15 கழகங்களில் இருந்து 18 அணிகள் கலந்து கொண்டன.

இத்தகைய சுற்றுப்போட்டி இரண்டொரு நாளிலேயே முடிந்து விடுதல் ஒரு சிறப்பு. அடுத்து தனி ஆட்டங்கள் நிறையக் கொண்டமைவதோடு, மிகமிக வேகமான ஆட்டங்களாகவும், இதற்கென அமைந்த தனியானதொரு ஆட்டப் பாணியொன்றினைக் கொண்டமைந்திருப்பதுமானது இன்னொரு சிறப்பு. இவ்வகையில் இக்குறுகிய ஓவர்களைக்கொண்ட போட்டிகள் மிகப் பிரபல்ய முறுவதோடு ரசிகர்களையும் பெருமளவில் கவர்ந்திருப்பதுமாக அமைந்துவிடுகிறது.

பொதுவாக யாழ்ப்பாணத்தில் பல கழகங்கள் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்டாலும் கூட, அவற்றின் போக்குகள் முடிவுகள் ரசிகர்களால் இலகுவாக தீர்மானித்துக் கொள்ளும்படியாகவே அமைந்துவிடுகின்றன. ஆனால் அண்மைக்கால போக்குகள் இப்பாரம்பரியத்தில் இருந்து சிறிது விலகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையிலேயே இச்சுற்றுப் போட்டியும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு KCCC அணியும் பற்றீசியன் வி. கழகமும் தகுதிபெற்றமை இதற்கொரு உதாரணமாகக்கொள்ளத்தக்கது. KCCC அணியினர் முதலில் சந்தித்த அ[illegible] யாழ் பல்கலைக்கழக அணியினராகும். இவர்கள் ரசிகர்களால் பலமானதொரு அணியாக இனங் காணப்பட்டவர்கள் இதற்கு ஏற்றாற்போல் KCCC துடுப்பெடுத்தாட்டத்தில் அணுகுதல் கஷ்டமானது எனும் வகையில் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள். சுதேசன் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். ஆட்டம் எதிரணிக்குச் சாதகமாக இராது என்பது பொதுவான கருத்தாக இருந்தது. ஆனால் Kccc அணியினர் 5.2 ஓவர்களிலேயே இவ்வெண்ணிக்கையைத் தாண்டி பல்கலைக் கழக அணியினருக்கும், ரசிகர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தனர். நவீந்திரன் மிகச் சிறப்பாக ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். இறுதி ஓவர் முதல் இரண்டு பந்துகளிலும் அவர் அடித்த 4-ம், 6-ம் அலாதியானவை.

இதையடுத்து கால் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் கோல்ட்ஸ் அணியைச் சந்தித்தார்கள். முதலில் துடுப்பெடுத்தாடிய Kccc 67/2 என்ற நிலையில் மீண்டும் நவீந்திரன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களும், சுதாகரன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களும் பெற்றார்கள். எதிரணியினர் 33 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. அரையிறுதியாட்டம் Kccc எதிர் கிராஸ்கொப்பர்ஸ் அணி என்றமைந்தது. இவ்வாட்டத்தில் ஆரம்பத்தில் Kccc ஐ கிராஸ் கொப்பர்ஸ் அணியால் கட்டுப்படுத்த முடிந்தாலும் கூட இறுதியில் அவர்களின் ஓட்ட எண்ணிக்கை 71 ஆக அமைந்தது. சுதாகரன் 25 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டார்.

இவ்வாட்டத்தில் Kcccயின் பாபு அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டு சென்றதைக் குறிப்பிட வேண்டும். இவர் மிக விரைவாக இறுதி நேரத்தில் சேகரித்த 15 ஓட்டங்கள் அணியை 70 ஓட்டங்களுக்கு மேல் கொண்டு சென்றது. பதிலளித்த கிராஸ் கொப்பர்ஸ அணி சகல இலக்குகளையும் 39 ஓட்டங்களு[illegible]ழந்தது. றொகான் முதல் ஓவரிலேயே ரண்அவுட் ஆகியமையும், ரஜீவன் இறுதி ஓவரில் இரண்டு இலக்குகளைச் சரித்தமையும் Kccc வெற்றிக்குப் பலமளித்தன. எனினும் ஆட்ட ஆரம்பத்தில் இருந்தே கிராஸ்கொப்பர்ஸ் அணி கட்டுக்குள் இருந்தது என்பதே உண்மை.

மறுவளமாக பற்றீசியன் அணி தம் முதலாவது ஆட்டத்தில் சாப்ரா அணியை சந்தித்தார்கள். சாப்ரா இலகுவாக ஓட்டங்களைச் சேகரிக்க இயலவில்லை. ஆனால் கணேஸ் லாவகமாக ஆடி 25 ஓட்டங்கள் வரையில் பெற்று அணியை 6/83 என்ற நிலைக்குக் கொண்டு சென்றார். அண்மைக் காலங்களில் அழகாகத் துளிர்த்துவரும் பற்றீசியன் அணி இலக்கெதுவும் இழக்காமல் தம் வெற்றியை பெற்றுக் கொண்டனர். இவ்வாட்டம் 4.5 ஓவர்களில் நிறைவடைந்தது. எரிக் 24, ஏபன் 22 என்றவாறு ஓட்டங்களைச் சேகரித்தனர். இவர்களின் அடுத்த ஆட்டம் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியுடன் அமைந்தது. சொக்ஸ் மிகப் பலமானதொரு அணி என்பதால் அதன் வெற்றி பற்றிப் பெரிதும் சந்தேகம் இருக்கவில்லை ஆட்டமும் ஆரோக்கியமான நிலையில் 67/3 என்றவாறு சொக்ஸ் அணிக்கு அமைந்தது- சதீஸ் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைச் சேகரித்துக் கொண்டார்.

பற்றீசியன் அணியினர் 68 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் எரிக் 15, ஏபன் 19 அகிலன் 15 என்ற ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதி ஓவரில் வெற்றிக்குப் 14 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பேட்டி களத்தில் நுழைந்தார். அவர் திட்டமிட்ட முறையிலேயே இறுதி ஓவரில் ஒரு ஆறும் பின்னர் இரண்டு இரண்டுகளும் சேகரித்து இறுதிப் பந்தில் நான்கடித்தால் தான் வெற்றி என்ற நிலையில் அற்புதமாக ஒருநான்கை அடித்து வெற்றிக் கிண்ணத்துக்கு சந்தர்ப்பம் அதிகம் கொண்ட அணியென்று கருதப்பட்ட சொக்ஸ் அணியை போட்டியில் இருந்து தவிர்த்து விட்டார். பற்றீசியன் அணி என்றும் மறக்க இயலாத ஒரு வெற்றியை பெற்றது.

அரையிறுதி ஆட்டத்திற்கு இவ்வாறு தகுதிபெற்ற பற்றீசியன்ஸ் ஜொனியன்ஸ் அணியினரைச் சந்தித்தபோது நிரம்பிய தன்னம்பிக்கையுடனேயே இருந்தனர். 1ம் 2ம் ஓவர்களில் காண்டீபன், பிரசாந்தன் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்த பற்றீசியன்ஸ் 49 ஓட்டங்களுக்கு ஜொனியன்சை அபாரமாக ஆடி ஆட்டமிழக்கச் செய்தனர். ஜொனியன்ஸ் அணிக்காகச் சூரியகுமார் பெற்ற28 ஓட்டங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அவரது பொறுப்பான ஆட்டம் ஓரளவாவது ஜொனியன்சை நிமிரச் செய்தது எனலாம். பதிலளித்த பற்றீசியன்ஸ் 50/2 என்றவாறு திறமையாக இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றார்கள். இவ்வாட்டத்தில் எரிக் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இறுதியாட்டத்தில் தமது திறமையை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெற்று வந்த Kccc, பற்றீசியன்ஸ் அணியினர் மோதினர். முதலில் துடுப்பெடுத்தாடிய Kccc 49 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தனர். முதல் ஓவரிலேயே அகிலன் சாய்த்த இரு இலக்குகள் Kccc க்கு பெரும் பாதகமாயிற்று. அதோடு ரஞ்சிற் இறுதி ஓவரில் ஒரு இலக்கைப் பெற, ரண் அவுட் ஒன்றும் ஏற்பட்டது. பதிலளித்த பற்றீசியன்ஸ் ஒரு இலக்கை மட்டும் இழந்து 52 ஓட்டங்களை 5.1 ஓவர்களில் பெற்றுக் கொண்டார்கள். ஏபன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களும் அகிலன் ஆட்டமிழக்காது 18ஓட்டங்களும் பெற்றனர் பற்றீசியன்ஸ் நிறைந்த தகுதியோடு சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

பற்றீசியன் அணியினர் கருத்துக் கூறும் போது எவ்வகைப் போட்டியொன்றிலும் தாம் பெற்ற முதல் கிண்ணம் இதுவே என்று கூறினர். Kccc யினர் கடந்த காலங்களில் சிறப்புறச் செய்திருந்தாலும் கூட தொடராக நிலைத்து நிற்கும் தன்மை குறைந்தவர்களாகவே (Inconsistency) இருந்துவந்துள்ளனர். ஆனால் இச்சுற்றுப் போட்டி இவர்கள் தம்மை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு விடவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதாக அமையும் எனலாம்.

விடயங்களைச் சரிவர எடு
மட்டுமன்றி, நீண்ட காலத்திலும் கூட அவை மிக்க பிரயோசனமாக இருக்கும்.

இந்தப் போட்டியின் பின் விளையாட்டு வீரர்கள் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்ட உணர்வலைகள் பலப்பல, ரசிகர்கள் விளையாட்டின் போக்குகளில் மாற்றங்களை விரும்பு
வும் கிரிக்கெட்டில்கூட ஒரு ஆதிக்க உணர்வு இருப்பதாக எண்ணம் தோன்றும். நடந்து முடிந்த இந்தப்போட்டி ஒரு புதிய போக்கைக்காட்டி நிற்கின்றது. நல்லதொரு திருப்பம் இது. இது தொடர வேண்டும். இவ் வகையில் வளமான கிரிக்கெட் இன்
வேற்பாட்டாளர்கள் காட்டிய முன்மாதிரி இனிவரும் எந்த விளையாட்டுக் களங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய முன் மாதிரியாகும்.

-நிர்மலன்.

# உலக டெனிஸ் ஆட்டக்காரர்களின் இலட்சிய கனவான 'விம்பிள்டன் கப்'

பல்வேறு விளையாட்டுத்துறைகளுள் ஆர்வமாக எதிர்பார்க்கப்படும் நிகழ்வுகளுள் ஒன்றாக அமைவது விம்பிள்டன் புற்றரை டெனிஸ்விளையாட்டாகும் விம்பிள்டன் டெனிஸ் 117 வருடவரலாறு கொண்டது. இன்றைய பிரபல்யம் மிக்கதும் பெரும் பணப் பரிசுகளைக் கொண்ட போட்டிகளில் ஒன்றாக அமைவதும் டெனிஸ் போட்டிகளாகும். வருடம் முழுவதும் உலகின் பல்வேறு பகுதிகளில் ஆடப்பட்டு வரும் ஒரு ஆட்டமும் இதுவாகும். யூ. எஸ். OPEN, பிரெஞ்ச் OPEN, டேவிஸ் கப் என்றவாறும் இன்னும் பல்வேறு வெற்றிக் கிண்ணங்களுக்காகவும் டெனிஸ் ஆடப்பட்டுவருகின்றது இவ் வாட்டங்களில் வெற்றி பெறுபவர்கள் விரைவிலேயே கோடீஸ்வரராகி விடுவது சாதாரணமாகி விட்டது.

விம்பிள்டன் டெனிஸ்பற்றிக் கூறும் போது இங்கு பன்னிரெண்டுவகையான டெனிஸ் போட்டிகள் நடைபெறுவதைக் குறிப்பிட வேண்டும் ஒற்றையர் ஆண், பெண் கலப்பு ஆண், பெண், இரட்டையர் ஆண்கள் 35 வயதிற்கு மேற்பட்ட வகையில் மூன்று பிரிவுகள் சிறுவர்க்கான நான்கு பிரிவுகள் என்ற வாறு இவை அமைகின்றன இருந்த போதிலும் ரசிகர்களினால் பெரிதும் பேசப்படுவதும் பிரபலியம் மிக்கதும் ஒற்றையர் ஆண்கள் ஆட்டமும் ஒற்றையர் பெண்கள் ஆட்டமுமே யாகும்.

விம்பிள்டன் '94 ஒற்றையர் ஆண்கள் பிரிவில் இம்முறையும் இரண்டாவது முறையாக பீட்சாம்பிராஸ் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுள்ளார். முன்பு வெற்றி வீரர்களாகப் பெயர் பெற்ற பியோன்போக் மெக்தன்ரோ, பொரிஸ்பெக்கர் போன்றவர்களையும் விட அதீததிறமைகளைக் கொண்டவர் இந்த அமெரிக்கர் என்று விமர்சகர்கள் கருத்துக் கூறுகிறார்கள் 22வயதாகும் பீட்சாம்பிராஸ் தற்போழுது புகழ் வாய்ந்த களங்களில் பலவெற்றிகளைப் பெற்றுள்ளார் இவரின் வெற்றிகள் இன்னும் தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

இம் முறை விம்பிள்டன் போட்டிகளில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் ஒன்றாக நடைபெற்றன ஒன்று ஒன்பது முறைகள் விம்பிள்டன் சாம்பியனாக விளங்கியமார்ட்டீனா நவரடிலோவா பத்தாவது முறையும் இறுதிப் போட்டிக்கு வந்தது அதேவேளை 22 வயது ஸ்பானிய மங்கை கொன் சீட்டா மார்டினெஸ் அவரைத் தோற்கடித்து முதல் ஸ்பானியப் பெண்ணாக விம்பிள்டன் வெற்றிக் கோப்பையைத் தட்டிக் கொண்டது.

நவரடி லோவாவின் விம்பிள்டன் சாதனை இலகுவில் முறியடிக்கப்பட முடியாதது. இவர் கலந்து கொண்ட இருபத்திரெண்டாவது விம்பிள்டன் போட்டியிது பதினொரு தடவை இறுதியாட்டத்தில் நுழைந்து ஒன்பது தடவை சாம்பியனாக வந்தவர். இதே வேளை கொன்சீட்டா மார்டினெஸ் இதுவரை விம்பிள்டன் கால் இறுதிப் போட்டிக்கு அப்பால் சென்றவரல்ல ஆனால் இம் முறை விம்பிள்டன் சாம்பியனாகவே வந்து விட்டார். இதில் என்ன வேடிக்கையென்றால் தான் ஆதர்ச பெண்ணாகக் கருதும் மார்ட்டீனாவைத் தோற்கடித்தே விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். மார்ட்டீனா களத்தை விட்டு வெளியேறுகையில் பதின்மூன்றாயிரம் ரசிகர்களின் இதய பூர்வமான வாழ்த்துக்களுடன் மிக்க கௌரவமான முறையில் கண்ணீர் மல்க வெளியேறினார். மார்ட்டீனா டெனிஸ் விளையாட்டைப் பொறுத்தவரை ஒரு சகாப்தம் என்றே கொள்ளலாம்.

விம்பிள்டன் போட்டிகள் இங்கிலாந்தின்பழமையையும், பாரம்பரியத்தையும் நவீன யுகத்துடன் இணைத்துச் செல்லும் போட்டிகள்போலத் தோன்றுகின்றது. இங்கிலாந்தின் பெருமையை உலகுக்குப் பறைசாற்றும் நிகழ்வு போலவும் தோன்றுகின்றது. அதன் பெருமைகளில் ஒன்று புற்றரையில் விளையாடுவது, மேலும் அரச குடும்பத்தினர் விளையாட்டைக் கண்டுகளிக்க வருவது, அவர்களே பரிசில் வழங்குவது அவர்களுக்கு வெற்றி வீரர் அறி

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சுய தொழில் கடன் திட்டம் 1593 குடும்பங்களுக்கு பயன்

கடந்த வருட நடுப்பகுதியிலிருந்து இம் மாதம் வரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுய தொழில் கடன் திட்டத்தின் மூலம் 1593 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை மேம்படுத்துவதுடன் சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாகவும் வட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் இக்கடன் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நெற்செய்கை, உருளைக் கிழங்கு செய்கை, மட்பாண்ட உற்பத்தி, கோழிவளர்ப்பு, கடற்தொழில், கைத்தொழில் போன்ற பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இக்கடன்கள் மீள அறவிடப்பட்டு தொடர்ந்தும் பல பயனாளிகளுக்கு வழங்கப்பட்டும் வருகின்றன.

இச் செயற் திட்டத்தில் இதுவரை மொத்தமாக ஒரு கோடி முப்பது லட்சம் ரூபாவுக்கு மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை மற்றும் அதிபர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கான பயிற்சி ஒன்றினை முறைசாராக் கல்வி ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

எனவே இது தொடர்பாக பயிற்சியில் பங்குகொள்ளவிரும்புவோர் யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

## பூநகரி வட்டம் மாவீரர்நினைவுக் கூட்டம்

மன்னாரிலுள்ள பூநகரி வட்டத்தில் கடந்த 6-ம் திகதி 1985-ம் ஆண்டிலிருந்து 1993-ம் ஆண்டு வரை 3-ம், 4-ம், 5-ம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் நினைவாக நினைவு கூரல் வைபவம் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்டது. முதல் நிகழ்வாக மாலை ஆறு மணியளவில் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. அல்வின் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மாவீரர்களின் பெற்றோர்கள் பான்ட் வாத்திய இசையுடன் நிகழ்வு மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் பிரதான ஈகச் சுடரை துணை மாவட்டத் தளபதி திரு. ஜீவன் அவர்களும் மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி வளர்மதி அவர்களும் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. அல்வின் அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் தமது புதல்வர்களின் ஈகச்சுடர்களை ஏற்றி வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் வட்டப் பொறுப்பாளர் திரு. சுகீன் தலைமையில் நினைவுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி வளர்மதி, நல்லூர் பாடசாலை அதிபர், பூநகரிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களும் உரை நிகழ்த்தினர். இறுதியில் கலைநிகழ்வுகளுடன் வைபவம் முடிவுற்றது.

## சிரமதானப்பணிகள்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு முல்லைமாவட்டத்தில் பல சிரமதான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. இவை வட்டரீதியாக

# பாரிய அளவிலான பனை நடுகைத் திட்டம்

தமிழீழத்தில் இருக்கின்ற பனைமரத் தொகையை இரண்டாயிரம் ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்குடன் ''கற்பகச்சோலை'' என்னும் பாரிய பனை நடுகைத்திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்த உள்ளது. இதன் முதற்கட்ட முயற்சியாக ஐந்து வருடங்களில் 50 இலட்சம் பனை விதைகள் நாட்டப்பட உள்ளன.

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள், பனை அபிவிருத்திச்சபை போன்ற துறைசார் நிறுவனங்கள் கிராமியஉற்பத்திக்குழுக்கள், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், பாடசாலைகள், புனர்வாழ்வுக்கழகங்கள், சாரணர்குழுக்கள், மற்றும் பொது ஸ்தாபனங்கள், ஆர்வமுள்ள பொது மக்கள் ஆகியோர் ஊடாக இப்பனை நடுகைத்திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப்பகுதியினர் நடைமுறைப்படுத்த உள்ளனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக பனை நடுகை முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளது. 1991-ல் 150 000 பனைவிதைகளும், 1992-ல் 157, 000 பனை விதைகளும், 1993-ல் 346, 000 பனை விதைகளும் நாட்டப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை வீதி ஓரங்கள், மைதானக் கரைகள் போன்ற பொது இடங்களிலேயே நாட்டப்பட்டன. கற்பகச்சோலை திட்டத்தின் கீழ் பெரும்பாலான விதைகள் பனந்தோட்டங்களாகவும், மாதிரிப் பண்ணைகளாகவும் நாட்டப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட உள்ளன.

## உடனடியாக பதிவு செய்க

சகல கைத்தொழில் நிறுவனங்களையும் பதிவு செய்து கொள்ளுமாறு கடந்தவருடம் அறிவுறுத்தப்பட்டிருந்தும் சில குளிகளி உற்பத்தியாளர்கள் தம்மை பதிவு செய்யாது உற்பத்தியை மேற்கொண்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே பதிவு செய்யாது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குளிர்களி தயாரிப்பாளர்கள் உடனடியாக தம்மைப் பதிவு செய்து கொள்வதோடு காலத்திற்கு காலம் வெளியிடப்பட்டுள்ள தரநிர்ணய அறிவுறுத்தல்களை தவறாது நடைமுறைப்படுத்தும் படியும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

# விடுமுறைவழங்கப்பட்டதால் பாவனையாளர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ கூ. சங்க பாவனையாளர் கிளைகள் பூட்டப்பட்டிருந்ததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

வேலணை ப.நோ கூ. சங்கத்தின் சகல கிளைகளிலும் நிவாரண விநியோகம் மற்றும் வியாபார நடவடிக்கைகள் திங்கட்கிழமை காலை பத்து மணியுடன் நிறுத்தப்பட்டு கிளைகள் அனைத்தும் மூடப்பட்டன.

இதனால் சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற பகுதிகளில் இருந்து நிவாரணம் எடுக்க வந்த மக்கள் ஏமாற்றத்துடனும் கோபத்துடனும் திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது.


இது பற்றி மேற்படி சங்க வட்டாரங்களிடம் வினவிய போது ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (88)

# மீண்டும் பழைய இடத்தில் பாடசாலை வேலைப்பகுதி

யாழ்கல்வித்திணைக்களத்தின் கீழ் இயங்கி கடந்த சில மாதங்களாக யாழ் கடற்கரைவீதியில் இடம்பெயர்ந்து, பொறியியற் திணைக்களத்தின்கீழ் பாடசாலைவேலைப்பகுதிஎன இயங்கிவந்த யாழ் கல்வித் திணைக்கள கட்டடப்பிரிவு நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் நல்லூரில் அமைந்துள்ள யாழ் கல்வித்திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளது.

இது இனிமேல் யாழ் கல்வித்திணைக்களத்தின் கீழேயே இயங்கும் எனவும் இதனை யாழ் கல்வித்திணைக்களத்தின்கீழ் இயங்குவதற்கான அனுமதியை வடக்குக்-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கி உள்ளார் என இப்பகுதியில் கடமையாற்றுபவர்கள் தெரிவித்துள்ளனர். முன்னர் இடம்பெயர்ந்த கடற்கரைவீதியில் உள்ள கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட சகல தளபாடங்கள் இவர்களால் மீளவும் யாழ் கல்வித்திணைக்களத்திற்கு நேற்றுமுன்தினம் எடுத்துவரப்பட்டுள்ளது. (17)


## 3 ஆம் ஆண்டு நினைவாக



வீரவேங்கை சதீஸ்குமார்
தாமோதரபிள்ளை சோமசுந்தரம்

பெற்றோர் மகிழ்ந்தது: 13 - 10 - 1971
தமிழீழ புகழடைந்தது: 05 - 08 - 1991

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதயர்: 10 - 12 - 1917
அஸ்தமனம்: 22 - 07 - 1993

## 41-ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



# சிலுவேஸ்திரி அருளப்பு

(மெக்கானிக்)

(சென் ஜேர்ஸ் வீதி, பலாலி தெற்கு, வசாவிளான்)

மலர்வு: 12 - 10 - 1930
உதிர்வு: 01 - 07 - 1994

வசாவிளானை பிறப்பிடமாகவும் தற்போது

13 - 10 - 1971 05 - 08 - 1991

ஆற்றல்மிகு தலைவர் ஆணை கேட்டு ஆர்வமுடன் ஆனையிறவு களம் நாடி ஈட்டினீர் ஈடிணையற்ற புகழ்தன்னை ஏற்றி நிற்கின்றோம் நெஞ்சினிலே நின் நினைவு தன்னை.


இவருடன் ஆ. க. வெ. தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்கள் அனைவருக்கும் எம் இதய அஞ்சலிகள்.

உம்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

திருமால் வாசா,
சதீஸ்குமார் வீதி,
மாசார் பளை
(10 - 08 - 1994) (9048)

திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை வட்டரீதியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டன.

இந்தச்சிரமதானப்பணிகள் மூலம் முல்லை வட்டத்தில் ரூ 5000/- வும், நெடுங்கேணி வட்டத்தில் ரூ 7500/- வும், புதுக்குடியிருப்பு வட்டத்தில் ரூ 12500/- வும். மணலாறு வட்டத்தில் ரூ 3000/- வும், ஒட்டிசுட்டான் வட்டத்தில் ரூ 15000/- வும், பெறுமதியான பயனுள்ள வேலைகள் செய்து முடிக்கப்பட்டது குறிப்பிட்டத்தக்கது.



## அமரர் கந்தையா செல்லையா

ஓராண்டு சென்றும் ஓயாத நினைவலைகள்
தீராத சோகத்தில் தினந்தினம் அலறுகிறோம்
பேரான தங்கள் திருமுகத்தைப் பார்த்திடவே
தாளாத ஆசை கூடுமோ எமக்கிறைவா?

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்'

68, புதியசெம்மணிவீதி,
நல்லூர்.
(9058)

வசாவிளானை பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாய் வடக்கில் வசித்து வந்தவருமான சி. அருளப்பு அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அவரது ஆன்மா இளைப்பாற்றிற்காக செபித்த குருக்கள், துறவிகள், கன்னியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இன்று புதன்கிழமை மாலை 5-00 மணிக்கு கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு நித்திய இளைப்பாற்றிற்காக மன்றாடவும்.

மனைவி, பிள்ளைகள்

புனித சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய்.
(9067)


# இன்னும் சில நாட்களில்.....

★ தமிழோசை
★ இது எங்கள் தேசம்
★ தாயகக் கனவு
★ சின்ன விழிகள்

போன்ற வெற்றிப் படைப்புகள் வரிசையில்

பொ. தாசனின்

# இன்னும் ஒரு நாடு

பாடல்:
புதுவை இரத்தினதுரை

இசை:
முரளி

பாடியவர்கள்:
சாந்தன், சுகுமார்

தயாரிப்பு:
முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்

(சி-10075)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



## சிந்தனைக்கு..

அரிமானவக் கூடி அடைய விரும்பும்
மடமான் பறிகொடுக்க வேண்டும்
காதலுக்காகத் தன் உயிரை.
- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 10-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# டி. பியின் புதிய கண்டுபிடிப்பு

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது இல்லை. இதற்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என்று கூறி வரும் சிறிலங்கா ஜனாதிபதி, இதற்கு அப்பால் ஒருபடி மேலே சென்று ஒரு அரசியல்-வரலாற்றுக் கண்டுபிடிப்பு ஒன்றையும் செய்துள்ளார். இதன் பிரகாரம் உலகில் இன ரீதியான அரசுகளே இல்லை. புவியியல் ரீதிய கவே அரசுகள் உருவாகின்றன என்பது அவரது கண்டுபிடிப்பாகும்.

இது குறித்து அக்குரஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா "இன அடிப்படையில் நாடுகளைப் பிரிப்பது ஏற்கப்படக்கூடியதல்ல. புவியியல் அடிப்படையிலேயே நாடுகள் பிரிக்கப்படுகின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

டி. பி, விஜேதுங்காவின் இவ் அரசியல் - வரலாற்று கண்டுபிடிப்பானது, அவர் தற்கால நவீன அரசியல் உலகை எந்தளவிற்குப் புரிந்து கொண்டுள்ளார் என்பது பற்றிய சந்தேகத்தையே எழுப்புகின்றது. சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகிய பண்டைய நாகரிகங்களும், அதனோடு உருவாகிய அரசுகளுமே பெரும்பாலும் புவியியல் ரீதியான எல்லைகளை கொண்டிருந்தன. பின்னர் பயணங்களும், படையெடுப்புக்களும், கண்டுபிடிப்புக்களும், தொழில்நுட்பமும் படிப்படியாக வளர அதாவது இயற்கையை மனிதன் வெற்றி கொள்ள தொடங்கிய பின்னர் நாட்டு எல்லைகள், அரசுகளின் உருவாக்கம் எல்லாம் இயற்கையை மிஞ்சியதாகவே இருந்தன. பௌதிக தடைகளையும் மீறி - கடல், ஆறு, மலை, பாலைவனம், காடு- அரசுகள் உருவாகின. இதில் ஒருவகை பௌதிக எல்லைகளைத் தாண்டிப் பேரரசுகளாகவும் விரிந்தன, மறுவளமாக ஒரே பௌதிக எல்லைக்குள் பல அரசுகளும் உருவாகின.

இதன் வளர்ச்சி இன்றைய 20ஆம் நூற்றாண்டின் நவீன அரசுகளில் இன்னமும் உயர்வாகவே உள்ளன. இன்று உலக நாடுகளின் எல்லைகள் இனம், மொழி, மதம் என்பனவற்றிற்கு அப்பாலும் மனிதனால் வரையப்பட்ட கற்பனைக் கோடுகளினாலேயே வரையப்பட்டும் உள்ளன. இதற்கு ஒன்றல்ல பல உதாரணங்கள் உலகில் உள்ளன.

# தபால் மூல வாக்களிப்பின்போது கட்சிகளுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

தபால் மூல வாக்குகள் வழங்கப்படும்போது உறை ஒன்றும் வாக்குச் சீட்டுடன் வழங்கப்படும் என்றும் வாக்களிக்கப்பட்ட பின்னர் வாக்குச் சீட்டை அவ் உறையில் இடுமாறும் தேர்தல் ஆணையாளர் அறிவித்து இருந்தார். ஆனால் தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டபோது, அதற்கான உறைகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று தபால் மூல வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தபால் மூல வாக்களிப்பு சீட்டை வெறுமனே தம்மிடம் வழங்கும்படியும், அதில் தாமே தேவையான இடத்தில் புள்ளடிகளை இட்டுக் கொள்வதாகவும் சில அதிகாரிகள் தம்மை கேட்டுக் கொண்டதாக பாதுகாப்புப் பிரிவுகளில் கடமை புரியும் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொலிஸ் தலைமை அலுவலகத்திலும், பாதுகாப்பு அமைச்சின் முப்படைத் தலைமை அலுவலகங்களிலும் இந்நிலைமை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வேறு பல இடங்களிலும் இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது மேலும் தபால் வாக்குகள் பதிவுசெய்யப்படும் இடத்தில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் இருப்பதற்கு தேர்தல் ஆணையாளர் அனுமதித்து இருந்தபோதும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் எதிர்க்கட்சி பிரதிநிதிகளுக்கு இதற்கான அனுமதியை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் விநியோகத் திட்டம் மாநகரசபை ஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர எல்லைக் குட்பட்ட குடிநீர் வசதி குறைந்த பகுதிகளில் இரண்டு குடிநீர் விநியோக திட்டங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ் மாநகர சபையினால் யாழ்ப்பாணம் கண்ணாபுரத்தில் ஒருதிட்டமும் திட்டிப் பகுதியில் ஒரு திட்டமுமாக இரண்டு திட்டங்களையும் யாழ் மாநகரசபை ஆணையாளர் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

மேற்படி திட்டங்களினால் கண்ணாபுரத்தில் -300 குடும்பங்களும் திட்டிப்பகுதியில் உள்ள -160 குடும்பங்களும் குடி நீர் வசதியைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (88) (24)

## திருநிலைப்படுத்தல் பொன்விழா

அருட்தந்தை எஸ். ஏ. மைக்கல்சாமி அ.ம.தி. அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் பொன்விழா இன்றுகாலை 10 மணியளவில் அரியாலை அமல அன்னை அன்பக சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (41)

## குழாய்க்கிணறுகள் அமைப்பு

(தொல்புரம்)

வறிய மக்களின் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் முகமாக குழாய்க் கிணறுகள் அமைத்து வழங்கப்படுகின்றன.

மேற்படிகுழாய்க்கிணற்றை தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தினர் வடமராட்சி திக்கம் கரும்புலிகள் குடியேற்றத்திட்டத்தில் வதிபவர்களுக்கான குடிநீர் வசதிக்காக அம் மக்களுக்கு சிறப்புற அமைத்து வழங்கியுள்ளனர் (41)

# பொது ஜன ஐ. முன்னணி வென்றால் பாதுகாப்பு அமைச்சராக கேணல்அநுருத்தரத்வத்தை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியினர் எதிர் வரும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சி அமைத்தால்பாதுகாப்பு அமைச்சர் பதவி கேணல் அநுருத்த ரத்வத்தைக்கு வழங்கப்படலாம் என்று ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் திருமதி சந்திரிகாவே பிரதமராக நியமனம் பெறுவார் என்ற திருமதி சிறிமாவோவின் அறிவிப்பை தொடர்ந்து திருமதி சந்திரிகா அஸ்கிரிய, மற்றும் மல்வத்தை பீடங்களின் பீடாதிபதிகளைச் சந்தித்துப் பேசி ஆசி பெற்றுள்ளார். அச்சமயம் கேணல் அநுருத்த ரத்வத்தையும் உடன் இருந்துள்ளார்.

## பொதுக் கூட்டம்

தொல்புரம் கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பொதுக்கூட்டம் எதிர் வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணியளவில் தொல்புரம் அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு க. கோபால கிருஷ்ணர் தலைமையில் நடைபெறும். (41)

# பொதுதேர்தல்முடிவுகளால் இழுபறிநிலை தோன்றலாம்

### கருத்துக்கணிப்பீடு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ. தே கவிற்கு எழு... ஐக்கிய முன்னணிக்கு எழுபத்து மூன்று இடங்களும், கிடைக்கக்கூடும் என்று சண்டே டைம்ஸ் வெளியிட்டுள்ள

# 300லட். ரூபா விவசாயக்கடன் மக்கள் வங்கி வழங்கும்

[யாழ்ப்பாணம்]

மக்கள் வங்கி வடபகுதி விவசாயிகளிற்கு முந்நூறு லட்சம் ரூபாவை விவசாயக் கடனாக வழங்க தீர்மானித்துள்ளது. இக்கடன் வசதியினால் மூவாயிரம் விவசாயிகள் பயனடையவுள்ளனர்.

94 - 95 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காலபோக செய்கைக்கான விவசாயக் கடனாக 300 லட்சம் ரூபாவை மக்கள் வங்கி யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு. கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள மூவாயிரம் விவசாயிகளிற்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கடன் திட்டமானது நெற்செய்கை, உருளைக்கிழங்கு மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகிறது.

92 - 93ஆம் ஆண்டு காலப் பகுதியில் இக்கடன் வசதியினால் 650 விவசாயிகள் வடபகுதியில் பயனடைந்ததாகவும் இதற்கு 104 லட்சம் ரூபா ஈடுபடுத்தப்பட்டதாகவும் 93 - 94 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக்கடன் திட்டத்தினால் ஆயிரத்து முந்நூறு விவசாயிகள் பயனடைத்துள்ளதாகவும் இதற்காக மேற்படி வங்கி 150 லட்சம் ரூபாவை செலவு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இருகாலப் பகுதி திட்டங்களும் வெற்றியளித்ததன் பயனாக இம்முறை இது இரட்டிப்பாக்கப்பட்டு 300 லட்சம் ரூபாவை கடனாக வழங்கி வடபகுதியின் விவசாயத் துறையை விருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இத் திட்டமானது மூவாயிரம் விவசாயிகளிற்கு பிரதேசசெயலர் பிரிவு ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## சுய முயற்சி ஊக்குவிப்புக்கு கடன்

(தொல்புரம்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் வறியகுடும்பங்களுக்கு சுயமுயற்சி ஊக்குவிப்புக் கடன் வசதி வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஊக்குவிப்புக் கடன்வசதியினை தேசிய சர்வோதயத்தினர் வழங்கி வருகின்றனர். உடுவில் பிரதேசத்தில் உள்ள மூன்று இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கி வாழும் 22 வறிய குடும்பங்களுக்கு சுயசார்புதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 44 ஆயிரம் ரூபாவினை கடனாக யாழ் தேசிய சர்வோதய புனர்வாழ்வு வருவாய் ஊக்குவிப்பு பகுதியினர் வழங்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது. (41

## வருடாந்த உற்சவம்

சக்கோட்டை புனித சவேரியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 11ஆம் திகதி பங்குத் தந்தை பி. எம். இமானுவேல் அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெறும். அன்று அன்னதானமும் வழங்கப்படும். (யோ)

# வாசுதேவவின் கருத்துபற்றி பௌத்தமதபீடங்கள்கவலை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிவேட்பாளராகப் போட்டியிடும் நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பாக பௌத்த மத பீடங்கள் கவலை கொண்டுள்ளன.

இது தொடர்பாக அவை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைப் பீடத்தை பிரதிபலிக்கும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க, கேணல் அநுருத்த ரத்வத்தை ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளன.

வண ரம்புக்வெல விபஸ்ஸி தேரோவை அண்மையில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க சந்தித்துபேசியபோது அவர் நேரடியாகவே வாசுதேவ

இதற்குப்பதிலளித்த திருமதி சந்திரிகா, வாசுதேவா கட்சி ரீதியாக பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணையவில்லை எனவும், தனிப்பட்ட நபராகவே இணைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார், இதேவேளை வாசுதேவ நாணயக்கார பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக கருத்துக் கூறும் தகுதியுடையவர் அல்ல என்று கேணல் அநுருத்தரத்வத்தை குறிப்பி

## பம்பாய் வெங்காய

அரசுகளில் இன்னும் உயிர்களாகவே உள்ளன. இன்று உலக நாடுகளின் எல்லைகள் இனம், மொழி, மதம் என்பனவற்றிற்கு அப்பாலும் மனிதனால் வரையப்பட்ட கற்பனைக் கோடுகளினாலேயே வரையப்பட்டும் உள்ளன. இதற்கு ஒன்றல்ல பல உதாரணங்கள் உலகில் உள்ளன.

இந்த வகையில் ஆபிரிக்க நாடுகளின் எல்லைகள் பல பூமியின் மேல் கற்பாறையாக வரையப்பட்ட அகல நெடுங் கோடுகளின் அடிப்படையில் இருப்பதைக் காணலாம். இதைப்போன்றேகனடா - அமெரிக்க நாடுகளின் எல்லையின் ஒருபகுதியும் வட-தென்கொரியாவின் எல்லையையும் சுட்டிக்காட்ட முடியும்.

இவ்வாறாக செயற்கையாகவே நவீன அரசுகளின் எல்லைகள் உருவாகியிருக்கும்போது, அரசுகளுக்கு புவியியல் ரீதியான எல்லைகளைத்தவிர இனரீதியான எல்லைகள் எவையும் சாத்தியமாகாது என்ற டி பி. விஜேதுங்காவின் கூற்றானது அவரது அரசியல் -வரலாற்று அறிவைப் பற்றியே எண்ணவைக்கின்றது.

அதிலும் அவர் சிறிலங்காவின் பிரதமராகவும்,ஜனாதிபதியாகவும் இருந்த காலத்திலேயே உலகில் இனரீதியாகப் பல அரசுகள் உருவாகி உள்ளன. சோவியத் ரூசியாவின் சரிவும், அதைத் தொடர்ந்து இனரீதியிலான 15 நாடுகளின் உருவாக்கமும், செக்கோசெலவோக்கியாவின் செக்- சொலவோக்கிய என்ற இனரீதியான பிரிவும், எத்தியோப்பியாவில் இருந்து எரித்திரியா என்ற நாடு இனரீதியான பிரிவும் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் நிகழ்ந்த அரசியல்- வரலாற்று நிகழ்வுகளே ஆகும்.

இந்த வகையில் டி பி. விஜேதுங்கா இனரீதியாக அரசுகள் உருவாவதோ அன்றிப் பிரிக்கப்படுவதோ உலக வழக்கிற்கு மாறானது என்பது அவரது அரசியல் ஞான சூனியத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது என்பதைவிட, அவரது பேரினவாதச் சிந்தனையை வெளிக்காட்டும் அம்சமாகவே கருத வேண்டியுள்ளது.

ஆனால், இது உலகிற்குப் புதியதல்ல. பேரினவாதிகளும், சர்வாதிகாரிகளும் தங்கள் பேரரசுகளை என்றும் கட்டிக்காக்கவே முயற்சித்தார்கள். ஆனால், அவை என்றுமே நிலையாக இருந்ததில்லை. ''சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் பேரரசு'' தமது விருப்பத்தின் பெயரில் சாம்ராஜ்யத்தை சரியவிட்டது. குடியேற்றங்களைவிட்டு வெளியேறியது. நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலேயே அது வெளியேறியது. இதேபோல் தேசிய இன அடிப்படையில் புதியநாடுகள் உருவாகியதும் மற்றையவர்களைக் கேட்டுக் கொண்டல்ல. ஒருதேசிய இன மக்களின் விருப்பத்தின் படியே. இதற்குப் பௌதிக எல்லைகளும் தேவையில்லை பாதுகாப்பு அரண்களும் தேவையில்லை. சுதந்திர உணர்வு கொண்ட வீரம் மிக்க மக்கள் இருந்தாலே போதும்.

கருத்துக்கணிப்பீடு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ. தே கவிற்கு எழுபது இடங்களும், பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எழுபத்து மூன்று இடங்களும், கிடைக்கக்கூடும் என்று சண்டேடைம்ஸ் வெளியிட்டுள்ள ஒரு கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேலதிக ஆசனங்கள் மற்றும் தேசிய பட்டியல்என்பனமூலம்மொத்தமாகஐதேகவிற்கு 92ஆசனங்களும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு 95 ஆசனங்களும் கிடைக்கக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இக்கருத்துக் கணிப்பீட்டில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## றுகுணுவில் தனியாருக்கு பொருள்

(யாழ்ப்பாணம்)

றுகுணு கப்பல் சீனி, உரம் ஆகியவற்றுடன் நேற்றுமுன்தினம்பருத்தித் துறை துறைமுகத்திற்கு வந்தது.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள சீனியும், உரமும் தனியார் வர்த்தகர்களுக்கு வந்துள்ளதாக தெரியவருகின்றது. (சி)

# ஐ. தே. க. வெற்றி பெறட்டும் ரொனிக்கு உதவமாட்டோம்

### -ஐ. தே. க. எம். பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ. தே கவின் வெற்றிக்காக உழைக்கும் அதேசமயம் முன்னாள் நிதியமைச்சரும், தற்போதைய கப்பல் கூட்டுத்தாபன அமைச்சருமான ரொனி டி மெல்லுக்கு உதவ முடியாது. இவ்வாறு மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஐ தே. கவின் இருமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் நேரடியாகவே தெரிவித்துள்ளனர்.

ரொனி. டி மெல் ஜனாதிபதியிடம் செய்து கொண்ட முறைப்பாட்டை தொடர்ந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எச். ஆர் பியசிறி மற்றும் மதுரபால எதிரிவீர ஆகியோரை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அப்போதே இருவரும் மேற்படி கருத்தை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர். அத்துடன் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்று எச். ஆர். பியசிறி ஜனாதிபதிக்குத் தெரிவித்தாராம்.

## ஆறுமுகநாவலர் சிலை அமைக்கமுயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரியில் ஆறுமுக நாவலர் உருவச் சிலை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது இதற்கான முயற்சிகளில் மேற்படி கல்லூரியின் பழையமாணவர் சங்கம் ஈடுபட்டுவருகின்றது. (88)

## மஹோற்சவம்

ஈவினைமத்தி கற்பகவிநாயகர் திருக்கோவில் மஹோற்சவ விழா இன்று கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி,புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கும், இரதோற்சவ விழா அன்று நண்பகல் 12.00 மணிக்கும், தீர்த்தோற்சவ விழா 20-ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கும் நடைபெறும்.

த்த மத பீடங்கள் கவலை கொண்டுள்ளன.

## பம்பாய் வெங்காய விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பம்பாய் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து அராலிப் பகுதியில் பெரும் தொகையான அளவு பம்பாய் வெங்காயம் உற்பத்தி செய்ததே விலை வீழ்ச்சிக்குரிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதி சந்தைகளில் ஒரு கிலோ பம்பாய் வெங்காயம் இருபது ரூபாய்ப்படி விற்கப்பட்டுவருகின்றது.

## பாராட்டு விழா

புத்தூர் சிறீ விசாலாட்சி சமேத விஸ்வநாதர் கோவிலில் மகாபாரதம் பற்றி தொடர் இசைச் சொற்பொழிவு நடத்திய நல்லைக் குருமணியின் பிரதம சீடரான சிவ. வை. நித்தியானந்த சர்மாவிற்கு நேற்று இரவு எட்டு மணியளவில் மேற்படி ஆலயத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

உலக

முகப்படுத்தப்படுவது, மற்றைய ஆடுகளங்கள் போலல்லாது விளையாடும் போது பெரும் அமைதி பேணப்படுவது என்றவாறு கூறிக் கொண்டு செல்லலாம்.

இன்றைய உலகில் தொழில்சார் போட்டிகள், நவீன விஞ்ஞான உபகரணங்கள், பல்வேறு நாகரிக அம்சங்கள் விம்பிள்டனில் ஊடுருவிக் கொண்டிருந்தாலும் கூட, இவை எல்லாவற்றையும் மீறி விம்பிள்டன் வாழும் ஏனெனில் ஒரு முறையாவது விம்பிள்டன் சாம்பியனாக வருவதே ஒவ்வொரு டெனிஸ் ஆட்டக்காரரின் கனவாகவும் இருந்து வருகிறது.

கொண்டுவந்துள்ளன.

வணரம்புக்வெல விபஸ்ஸி தேரோவை அண்மையில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க சந்தித்துபேசியபோது அவர் நேரடியாகவே வாசுதேவ நாணயக்காரவின் நடவடிக்கைகள்தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

## நல்லைக் குமரன் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் 'நல்லைக்குமரன்மலர்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை 11-ம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு நல்லூர் இந்து மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் முருகன் கோவில் திருவிழாவை முன்னிட்டு வருடந்தோறும் இந்நூல் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் இம்முறையும் யாழ் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் இது வெளியிட்டு வைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [பா]

## அறவழி விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி - நுணாவில் அறவழி மழலைகள் கல்விப் பூங்கா இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 10 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நுணாவில் அ. க. த. பாடசாலை மைதானத்தில் திரு க. இளையதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் டாக்டர் பிலிப்ஸ் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக அறவழித்திட்ட இணைப்பாளர் திருமதி கனகா தங்கராசாவும் கலந்து கொள்கின்றனர். (24)

இதேவேளை வாசுதேவ நாணயக்கார பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக கருத்துக் கூறும் தகுதியுடையவர் அல்ல என்று கேணல் அநுநத்தரத்வத்தை குறிப்பிட்டார்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் றோட்டரக்ற் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. இதில் விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.08.10**

**புதன் இரவு**

08. 01 - குயிலோசை - நிகழ்ச்சியில்களத்தில் காத்தான் சிந்து நடைக்கூத்து- அங்கம் 5
08. 20 - ஏர்முனை -''விவசாயத்தில் கைத்தொழில் பயிர்கள்'' கேள்வி பதில்
08. 30 - செய்திகள்
08. 40 - நாடகம் - ''ஆசை''

**1994.08.11**

**வியாழன் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - விடுதலை கீதங்கள்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்,



# காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாக். நாடாளுமன்றம் தீர்மானம்

ஜம்மு காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானமொன்றை பாகிஸ்தான் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

இதேவேளை, இத்தீர்மானம் இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதை காட்டுவதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா குற்றஞ்சாட்டியுள்ளார். காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாக்கி சிம்லா ஒப்பந்தத்தை மீற பாகிஸ்தான் முயலுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிம்லா ஒப்பந்தத்தின் கீழே இரு நாடுகளும் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார்.

## வாசுதேவவின் பேச்சுக்கு காமினிஜெயசூரியகண்டனம்

பெரும்பான்மையாக தமிழர்கள் இருக்கும் பகுதிகளில் தனியான நிர்வாகம் நடத்த வசதி அளிக்கப்பட வேண்டும், அப்போதுதான் யுத்தம் நிறுத்தப்படும், தகராறை முடிவுக்கு கொண்டுவர தமிழர்களின் கோரிக்கையை ஏற்க வேண்டும் என் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் வாசுதேவ நாணயக்கார கூறியிருப்பதை, சிங்கள மக்கள் பாதுகாப்பு இயக்கத் தலைவர் காமினி ஜெயசூரியா கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பிரிவினையை தடுக்க தலையீடு செய்யுமாறு பௌத்த மகாசங்கத்தினருக்கு கோரிக்கையும் விடுத்துள்ளார் முஸ்லிம் மக்களும் தமிழ்மக்களும் ஐககியப்பட்டு, நம்பிக்கை வைகக முடியாத சிங்கள மக்களை தோற்கடிக்குமாறு, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு கடிதமெழுதிபிருப்பதான செய்தியையும் அவர் கண்டித்துள்ளார்.

## வறுமை நிவாரணத்திற்கு விட்டாமில்க் திணிப்பு

வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பத்தில் உள்ள சிறுவர்களுக்கான 50 ரூபா பெறுமதியான முத்திரைக்கு மேலும் ஒன்பது ரூபாவை பெற்றுக்கொண்டு கட்டாயத்தின் பேரில் விட்டாமில்க் பால்மா திணிக்கப்படுகின்றது.

எத்தனை 50 ரூபா முத்திரைகள் உண்டோ அத்தனை முத்திரைக்கும் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக 9 ரூபா செலுத்தி விட்டாமில்க் பால்மா வாங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

## தீவுப்பகுதியில் மோசடிபுரிய ஐ. தே. க. ஏற்பாடு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதிகளில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்களில். மோசடித்தனமான முறையில் வாக்குகளை நிரப்ப படையினரின் உதவியை ஐக்கிய தேசியக் கட்சி நாடியுள்ளதாக கொழும்பு வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆறாயிரம் வாக்காளர்கள் உள்ள தீவுப் பகுதிகளில் குறைந்தது 3 இலட்சம் வாக்குகளையாவது வாக்குப் பெட்டிகளுக்குள் நிரப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவ் இதழ் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டப் பிரதிநிதிகளாக 10 பேரையும் தெரிவு செய்து தனது அணிக்கு பலம் சேர்க்க முயலும் ஐ. தே. க, முயற்சியே இது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமுகமளிக்கவும்

1994 ஆகஸ்ட் க. பொ. த. (உ/த) பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்வதற்காக கப்பலில் பயணம்செய்ய விரும்புவோர் தமக்குக் கிடைத்துள்ள உத்தியோகபூர்வ நியமனக்கடிதத்துடனும் ரூ. 500/- கப்பல் கட்டணத்துடனும் இன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக யா-புனித பொஸ்கோ வித்தியாலயத்திற்குச் சமுகமளிக்கும்படி யாழ்ப்பாணம் வலயம் -1 இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## பயிற்சி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப் பிரிவும் அகதிகள் 'புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நடத்தும் தொழில்திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிகளில் யா- இணுவில் மத்திய கல்லூரியில்உடையமைத்தல், மோட்டார் சைக்கிள் திருத்துதல் பயிற்சியும், யா- கோப்பாய் மகாவித்தியாலயத்தில் பனம்பொருள் கைப்பணிப் பயிற்சியும் நடைபெற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களை அந்தந்த பாடசாலை அதிபருக்குஅனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.

### வடக்கு-கிழக்கு

குறிப்பிடப் பட்டுள்ளதாவது; பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைத் திட்டத்தால் எங்கள் நாட்டிற்கும் இனத்துக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாது என்பதை உங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன் எனவும் அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது-

### தேர்தல்

டாரங்கள் தெரிவிக்கையில் இரகசிய பாதுகாப்புசேவை, மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து கிடைத்துள்ள மறைமுகத் தகவல்கள் கொலை முயற்சிகள் இடம்பெறலாமென்பதை உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளன

சந்திரிகா குமாரணதுங்கா இந்த முடிவைத் தொடர்ந்து

## விமானம் நோட்டம்

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வை - 12 அவ்ரோ விமானம் ஒன்று நேற்று தென்மராட்சி பகுதி முழு இடமும் சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் பலாலிப் பகுதியில் இருந்து வந்த மேற்படி விமானம் சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாழ் போன்ற இடங்களை சுமார் 15 நிமிடத்திற்குமேல் சுற்றி நோட்டமிட்டது. இதேவேளை இவ் விமானம் நேற்று முன் தினம் மாலை இப்பகுதியை நோட்டமிட்டுச் சென்றதால் மக்கள் பீதி அடைந்தனர். இதேவேளை இரவு வேளைகளிலும் விமான நோட்டம் காணப்படுகின்றது. அத்தோடு இடையிடை இரவு வேளைகளில் ஆனையிறவு, பூநகரி போன்ற இராணுவ முகாம்களில் இருந்து கிளாலி, அல்லிப்பளை, கறுக்காய் தீவு போன்ற கடல் கரையோரங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலும் இடம்பெறுவதாக தெரியவருகின்றது. (86)

## அறிவுறுத்தல் கூட்டம்

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களாகவும், நிரந்தர நோக்குநர்களாகவும் நியமிக்கப்பட்ட தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யா- சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகம்தரும்படி கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் கேட்டுள்ளார். (86)

### முப்படைகளின்

துள்ளார் -

இவர்களுக்கு உதவியாக பொலிசார் கடமையாற்றுவார்கள் என்றும்- ஆனால் பாதுகாப்பு நடவடிக்கை முழுமையாக முப்படைகளுக்கும் கீழ் வரும் எனவும் இதற்கு ஓர் இணைப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

### மருத்துவ

மருத்துவபீட வளாகத்துள் இருந்து மருத்துவபீட மாணவர்கள் அங்குள்ள இரு பிரதான வாயில்களையும் பூட்டி வைத்துவிட்டு மறியலில் ஈடுபட்டனர்,

இதனையடுத்து மருத்துவ பீடத்தின் அனைத்து அலுவல்களும் ஸ்தம்பிதமடைந்தன. இதனைத்தொடர்ந்து

வடக்கு - கிழக்கு இணைப்பை

# வர்த்தமானி அறிவிப்பால் இல்லாதொழிக்க முடியாது

(கொழும்பு)

வடக்கு - கிழக்குமாகாணங்களின் இணைப்பை ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு மூலம் பிரிக்க முடியாது என்றும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் மட்டுமே இவ் இரு மாகாணங்களையும் பிரிக்க முடியும் எனவும் அரசியல் அமைப்பு சட்டத்தில் இருப்பதாக அரசியல் அமைப்பு அமைச்சர் கே. எம் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக்கருத்தை தெரிவித்துள்ளார். இது குறித்து அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்கதேரர் ஒரு தவறான கருத்தை கொண்டிருப்பதையிட்டு ஐ. தே. க. கவலையடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

இதே வேளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் முஸ்லிம் காங்கிரசும் மேற்கொண்டதாக கூறி போலியான ஒப்பந்தம் ஒன்றை அஷ்ரப் மல்வத்த மாநாயக்கதேரோவிடம் காட்டி அவரை ஏமாற்றி இருப்பதாவும் எனவே மகாசங்கத்தினர் இவ் ஏமாற்றை விரைவில் உணர்வார்கள் எனவும் ஐ தே. க. பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்

அப்போது அவ் ஒப்பந்தத்தை நீங்கள் பார்த்தீர்களா என செய்தியாளர் கேட்டதிற்கு இன்னும் பார்க்கவில்லை என பதில் அளித்தார் அப்போது கவனமாக பாருங்கள் நீங்களும் ஏமாற்றம் அடையலாம் என செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

### ஊழல்

றொனி டிமெல், வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே உட்பட பல அமைச்சர்கள் மற்றும் புகையிரத திணைக்கள தலைமை அதிகாரி பி டபிள்யு சில்வா உட்பட பல கூட்டுத்தாபன தலைவர்கள் மீது சுமத்தப்பட்ட லஞ்சஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது-

தற்போது முடியும் தறுவாயில் உள்ள இந்த விசாரணைகள் தொடர்பாக உரிய ஆவணங்களை முற்றாக அழித்து விடும்படி ஜனாதிபதி அக் குழுவிற்கு உத்தரவிட்டுள்ளார்-

### யாழ்.

நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இவ் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு விமானப்படை, கடற்படைகளின் விசேட அணியின் உதவி பெற்றுக்கொள்வது தொடர்பாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் வாக்களிப்பு நடைபெறும் இடங்களில் வாக்களிப்பு நடைபெறும் விதம் குறித்து பார்வையிடுவதற்கு செல்லும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுவின் பிரதிநிதிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

### சந்திரிகாவை

ளில் பங்குபற்றுவது தொடர்பாக, தனது பாதுகாப்பு ஆலோசகர்களுடன் கலந்து

## விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

குறுக்கும்நெடுக்குமாகவந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்தார். சென்ற சனி காலை10 மணியளவில் ஆனைப்பந்தி சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் நல்லூரடியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்ற இளைஞர்காலிலும் கையிலும் காயம் அடைந்தார். இவரது மோட்டார் சைக்கிளும் சேதமாகியது. (22)

## மரண அறிவித்தல்

### திரு. பொன்னம்பலம் இராசையா (பாலு)

(ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்)

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம இராசையா 9-8-94 செவ்வாய்க்கிழமை நண்பகல் காலமானார். இவர் காலஞ்சென்ற இ. நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திலகவதி, காலஞ்சென்ற குழந்தைவேலு, காலஞ்சென்ற நடராசா (ஆசிரியர்), துரையப்பா (சோதி) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-8-1994 புதன் கிழமை (இன்று) காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;

புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு. திருமதி நடேசன் லலிதா (பெறாமகள்) (சி-10083)

## விதை உருளைக்கிழங்கிற்கான முற்பணம் அறவிடுதல்

1994/95 காலபோகத்திற்கான விதை உருளைக் கிழங்கிற்கு விண்ணப்பிக்கவர்கள் 10-08-94 கொடுக்

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

கிழங்கிற்கு விண்ணப்பித்தவர்கள் 10-08-94 தொடக்கம் 31-08-94 வரை தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைந்துள்ள ''பசுமை வேளாண் சேவை'' நிலையங்களில் பின்வரும் அடிப்படையில் விதை உருளைக்கிழங்கிற்கான முற்பணத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1) ஐந்து பெட்டிகளிற்கு குறைவாக விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பித்த அளவுக்கும், ஐந்து பெட்டிகளுக்கு மேல் விண்ணப்பித்தவர்கள் ஐந்து பெட்டிகளுக்கும் முற்பணம் செலுத்துதல் வேண்டும்.
2) முற்பணம் ஒரு பெட்டிக்கு 3500/- என்ற விகிதத்தில் அறவிடப்படும்.

குறிப்பு:- 31-08-94ஆம் திகதிக்குப்பின்னர் முற்பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

★ பசுமை வேளாண் சேவை ★

(சி-10085)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### யாழ். மாவட்டம்

# முக்கிய அறிவித்தல்

மீசாலையில் இயங்கி வரும் விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் இயக்குநர் திரு. மா. சிவசுப்பிரமணியம் என முன்னர் வந்த செய்தி தவறானதாகும். இவர் அந் நிறுவனத்தில் ஆசிரியராகவே பணியாற்றுகின்றார்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் ஒழுங்கு விதிகளை மீறிய குற்றத்திற்காக மேற்படி கல்வி நிறுவனத்திற்கு தனியார் கல்விப் பிரிவினால் விதிக்கப்பட்ட 3285 ரூபா அபராதத் தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளதனால் இக் கல்வி நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக திரு. மா. சிவசுப்பிரமணியம் (மணியம் மாஸ்டர்) அவர்களின் கல்விச் சேவையினை எந்தவொரு கல்வி நிறுவனமும் பெறக் கூடாது என எமது அங்கத்தவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தற்போது நீக்கப்படுகின்றது. இன்று முதல் இவ்வாசிரியரின் கல்விச் சேவையினைப் பயன்படுத்துவதற்கு எமது அங்கத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

பொதுச்செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(சி-10084)

இந்த முடிவைத் தொடர்ந்து நேற்றைய தினம் காலி, பிலேவெல, பலப்பிட்டிய, மானால பகுதிகளில இடம் பெறவிருந்த பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன இப்பிரசாரக் கூட்டங்களுக்கு சந்திரிகா குமாரணதுங்காவின் உரை அடங்கிய ஒலிநாடாக்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும மேலும் தெரியவருகின்றது

## மருத்துவபீட

களின் போது இருதரப்புக்குமிடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அடுத்துவரும் ார தவைக்கூட்டத்தின் போது மேற்படி ஆட்சேபனை குறித்து கவனத்தில் எடுக்கப்படும் என்று துணைவேந்தர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதுவரை மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் துணைவேந்தர் மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (க), (பா)

## வாய் சுகாதார

இப் பல்நோய்கள் அதிகரிப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன- மூன்றாம் உலக நாடுகளில் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது- ஆனால் அதற்கேற்ற விகிதத்தில் வைத்தியரின் எண்ணிக்கை அதிகரிக்க வில்லை.

பல் சம்பந்தமான நோய்களுக்கு அவற்றை குணப்படுத்துவதற்கான மருந்துவ்கைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன- ஆனால் நோயைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது-

தன. இதனைத்தொடர்ந்து விரிவுரையாளர்களும் ஊழியர்களும் உட்செல்ல முயன்ற வேளை அவர்களை மாணவர்கள் தடுத்து நிறுத்தினர். பின்னர் விரிவுரையாளர்களும் ஊழியர்களும் தமது வீடுகளுக்கு திரும்பிவிட்டனர்.

அத்துடன் மருத்துவ பீடத்தின் முன்சுவர்களில் ''மருத்துவபீட மாணவர்கள் என்ன தலையாட்டும் பொம்மைகளா?'' ''பல்கலைக் கழகக் கல்வி என்ன மளிகைக்கடைச் சரக்கா''' ''43 பேரிற்காக 4 வருடங்கள் தாமதிப்பதா''? போன்றகோசங்கள் அடங்கிய சுவரொட்டிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒட்டப்பட்டிருந்தன.

இவர்களின் நேற்றைய மறியல் போராட்டம் நேற்று மாலைவரை தொடர்ந்தது. தொடர்ந்தும் மறியல்போராட்டம் நடைபெறும் எனத் தெரியவருகின்றது. (பா) (க)

## நோயாளர்

18-ஆம் திகதி செல்ல இருக்கும் நோயாளரை ஏற்றிச் செல்லும் கப்பல் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது.

## உழவுயந்திர

சதாசிவம் - சுபாகரன் (வயது 17) என்பவர் சிறு காயத்துக்குள்ளானார்.

பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில் கட்டடங்கள் இடித்து துப்புரவு செய்து அங்குள்ள மண், கல் ஆகியவற்றை உழவு இயந்திர மூலம் ஏற்றிச் செல்லும் போதே இவ்விபத்து ஏற்பட்டது.. (யோ)

## வடக்கு

றம் செய்ய உதவுமாறு சகல பாடசாலை அதிபர்களையும் வடச்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளார்.

ஆலோசனை செய்தபின் இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்

## தேர்தலில்

சந்திரிகா குமாரணதுங்கா நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை புலிகளுடன் மேற்கொள்ள தயார் எனக் கூறிய போதும், தமிழர்களுக்கு எதையும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற கருத்துள்ளவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நிரம்பியிருப்பதையும் அச்சஞ்சிகை குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

## அரசியல்

நிகழ்ச்சியின் போதோ அரசியற் தலைவர் ஒருவருக்கு அணிவிக்கப்பட இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் கூறுகின்றன.

இப் பூமாலை குறித்து அவதானமாக இருக்கும்படி அரசியற் தலைவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு படையினரும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவின் ஆலோசனைக்கு இணங்க தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பலவற்றிற்கான பாதுகாப்புமேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசியல்கூட்டங்கள், வைபவங்களை ஒழுங்கு செய்யும் நபர்கள் குறித்து கூடிய அவதானம் செலுத்துமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் கூட்டங்கள், வரவேற்பு வைபவங்களில் கலந்து கொள்ளும் அரசியற் தலைவர்கள் பொதுமக்களிலிருந்து 30 மீற்றர் தூரத்திற்கு அப்பால் இருக்கும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.



தவப்பேறு
1910-07-11

சிவப்பேறு
1994-07-11

## திரு. ஐயாச்சாமி - சாந்தகுரு

(வித்துவக் கலைஞன்)

அமரர் ஆறுமுகம் ஐயாச்சாமி சாந்தகுரு வித்துவக் கலைஞன் சன்மார்க்க தவகூடம் அவர்களின் சிவப்பேறு அடைந்த கிரியை சம்பவ நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார். உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் சுகவீனமுற்ற காலத்தில் உதவிய வைத்தியகலாநிதியாளர்கட்கும் நோயாளர் நலன்புரிச்சங்க தொண்டர்களுக்கும் மற்றும் சரீர உதவி புரிந்த யாவர்க்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகள்.

11-8-1994 வியாழக்கிழமை நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் யாவரையும் அழைக்கின்றோம்.

'தமிழ் இல்லம்'
சன்மார்க்க தவகூடம்,
கந்தரோடை ஆதீனம்,
தமிழ் ஈழம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(9070)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.